ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ பொன்னியற்கிண்கிணி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ பொன்னியற்கிண்கிணி ॥

## அச்சோப் பருவம்

‡பொன் இயல் கிண்கிணி⋆ சுட்டி புறம் கட்டி⋆
தன் இயல் ஓசை⋆ சலன் சலன் என்றிட⋆
மின் இயல் மேகம்⋆ விரைந்தெதிர் வந்தாற் போல்⋆
என் இடைக்கோட்டரா அச்சோ அச்சோ⋆
எம்பெருமான்! வாராய் அச்சோ அச்சோ (1)

செங்கமலப் பூவில்⋆ தேன் உண்ணும் வண்டே போல்⋆
பங்கிகள் வந்து⋆ உன் பவள வாய் மொய்ப்ப⋆
சங்கு வில் வாள் தண்டு⋆ சக்கரம் ஏந்திய⋆
அங்கைகளாலே வந்தச்சோ அச்சோ⋆
ஆரத் தழுவாய் வந்தச்சோ அச்சோ (2)

பஞ்சவர் தூதனாய்ப்⋆ பாரதம் கைசெய்து⋆
நஞ்சுமிழ் நாகம்⋆ கிடந்த நல் பொய்கை புக்கு⋆
அஞ்சப் பணத்தின் மேல்⋆ பாய்ந்திட்டருள் செய்த⋆
அஞ்சன வண்ணனே! அச்சோ அச்சோ⋆
ஆயர் பெருமானே! அச்சோ அச்சோ (3)

நாறிய சாந்தம்⋆ நமக்கிறை நல்கென்னத்⋆
தேறி அவளும்⋆ திருவுடம்பில் பூச⋆
ஊறிய கூனினை⋆ உள்ளே ஒடுங்க⋆ அன்று
ஏற உருவினாய்! அச்சோ அச்சோ⋆
எம்பெருமான்! வாராய் அச்சோ அச்சோ (4)

கழல் மன்னர் சூழக்⋆ கதிர் போல் விளங்கி⋆
எழலுற்று மீண்டே⋆ இருந்துன்னை நோக்கும்⋆
சுழலைப் பெரிதுடைத்⋆ துச்சோதனனை⋆
அழல விழித்தானே! அச்சோ அச்சோ⋆
ஆழி அங்கையனே! அச்சோ அச்சோ (5)

போர் ஒக்கப் பண்ணி⋆ இப் பூமிப்பொறை தீர்ப்பான்⋆
தேர் ஒக்க ஊர்ந்தாய்⋆ செழுந்தார் விசயற்காய்⋆
கார் ஒக்கும் மேனிக்⋆ கரும் பெருங்கண்ணனே!⋆
ஆரத் தழுவாய் வந்தச்சோ அச்சோ⋆
ஆயர்கள் போரேறே! அச்சோ அச்சோ (6)

மிக்க பெரும் புகழ்⋆ மாவலி வேள்வியில்⋆
தக்க இதன்றென்று⋆ தானம் விலக்கிய⋆
சுக்கிரன் கண்ணைத்⋆ துரும்பால் கிளறிய⋆
சக்கரக் கையனே! அச்சோ அச்சோ⋆
சங்கம் இடத்தானே! அச்சோ அச்சோ (7)

என் இது மாயம்⋆ என் அப்பன் அறிந்திலன்⋆
முன்னைய வண்ணமே⋆ கொண்டளவாய் என்ன⋆
மன்னு நமுசியை⋆ வானில் சுழற்றிய⋆
மின்னு முடியனே! அச்சோ அச்சோ⋆
வேங்கட வாணனே! அச்சோ அச்சோ (8)

கண்ட கடலும்⋆ மலையும் உலகேழும்⋆
முண்டத்துக்காற்றா⋆ முகில்வண்ணா ஓ! என்று⋆
இண்டைச் சடைமுடி⋆ ஈசன் இரக்கொள்ள⋆
மண்டை நிறைத்தானே! அச்சோ அச்சோ⋆
மார்வில் மறுவனே! அச்சோ அச்சோ (9)

துன்னிய பேரிருள்⋆ சூழ்ந்துலகை மூட⋆
மன்னிய நான்மறை⋆ முற்றும் மறைந்திட⋆
பின் இவ்வுலகினில்⋆ பேரிருள் நீங்க⋆ அன்று
அன்னமதானானே! அச்சோ அச்சோ⋆
அருமறை தந்தானே! அச்சோ அச்சோ (10)

‡நச்சுவார் முன் நிற்கும்⋆ நாராயணன் தன்னை⋆
அச்சோ வருக என்று⋆ ஆய்ச்சி உரைத்தன⋆
மச்சணி மாடப்⋆ புதுவைகோன் பட்டன் சொல்⋆
நிச்சலும் பாடுவார்⋆ நீள் விசும்பாள்வரே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥